7th December 1961]

Backward areas

***2128** *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN :** *கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 14-ம் தேதி 811-ம் எண் கேள்விக்குக் கொடுத்த பதிலையொட்டி நமது ராஜ்யத்தில் ஜில்லா வாரியாக பிற்பட்ட பகுதிகள் யாவை ?

(இ) எந்த அடிப்படையில் பிற்பட்ட பகுதிகள் என்று நிர்ணயிக்கப்பட்டது ?

(உ) பிற்பட்ட பகுதிகளை முற்பட்ட பகுதியாக மாற்றுவதற்காக சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (அ) to (உ) There has been no classification of areas in the State as backward areas. However, there are certain areas in districts which are comparatively less developed than other areas. The needs of these areas have been taken into account while preparing the Third Five Year Plan of the State.

***2129** *Q.*—**Sri S. M. ANNAMALAI :** *கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 14-ந் தேதி நட்சத்திரக் குறியிட்டக் கேள்வி எண் 811-க்கு அளித்த பதிலையொட்டி எந்தெந்த பகுதிகள் பிற்பட்ட பகுதிகள் என்று சர்க்கார் முடிவு செய்துள்ளனர் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : The attention of the hon. Member is invited to the answer to the Legislative Assembly Question No. 2128.

Sri K. ANBAZHAGAN : *ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த மக்களுடைய சராசரி வருமானத்தைப் பொறுத்து ஏறத்தாழ ஒரே நிலையில் இருக்கும் அளவுக்கு தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்று சொன்னால், ஒவ்வொரு மாவட்டத்தினுடைய சராசரி வருமானத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, பிற்பட்ட பகுதியை நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?*

The Hon. Sri C. SUBRAMANIAM : *ஒவ்வொரு ராஜ்யத்தின் அளவிலேதான் இப்பொழுது இந்த சராசரி வருமானம் இன்றைக்கு நிர்ணயிப்பதற்கான ஒரு முறையை மிகவும் கஷ்டப்பட்டு ஏற்படுத்தியிருக்கிறோம். ஜில்லா வாரியாக அதை நிர்ணயிப்பது என்பது முடியாத காரியம். ஆனால் தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டுமென்று சொல்லும்போது, பிற்போக்கான இடத்திலே தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டுமென்று சொன்னால், அதிலே சில கஷ்டங்கள் இருக்கின்றன. சர்க்கார் சில தூண்டுதல்களைக் கொடுத்து பிற்போக்காக இருக்கப்படும் பகுதிகளிலே சில தொழில்களை ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்து வருகிறார்கள்.*

[7th December 1961

SRI J. MATHA GOWDER : பிற்பட்ட ஜில்லா என்று பிரகடனம் செய்ய முடியாது என்று சொன்னாலும்கூட, மாகாணத்திலே இருக்கக்கூடிய ஜில்லாக்களிலே எந்த ஜில்லா முன்னேற்றம் அடையவில்லை என்பதைப் பரிசீலனை செய்து, அந்த ஜில்லாக்களுக்கு தனிச்சலுகைகள் கொடுப்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ? இம்மாதிரியான பிற்பட்ட பகுதிகளுக்கு என்னென்ன சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ராமநாதபுரத்திலே ஒரு பெரும் பகுதியும், திருநெல்வேலியிலே ஒரு பகுதியும் நம்முடைய ராஜ்யத்திலே மிகவும் பிற்போக்காக இருக்கக்கூடிய பிரதேசங்கள். அந்த இடங்களிலே புதிய தொழில்கள் அமைப்பதற்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கலாமோ அவைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே எந்தெந்த வசதிகள் செய்து கொடுக்கமுடியுமோ, அப்போதைக்கப்போது அவற்றை கவனித்து புதிய வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

SRI M. S. SELVARAJAN : தொழில் துறையில் பிற்பட்ட பகுதிகள் என்று நிர்ணயிக்கப்பட்டு இருப்பதைத் தவிர, பிளாக்குகள் வாரியாக எது பிற்பட்டது என்று கருதி நிர்ணயிக்கும் முறை இருக்கிறதா ? அத்தகைய நிர்ணயம் இருக்குமேயானால், எந்த அடிப்படையிலே பிற்பட்டது அல்லது முற்பட்டது என்று நிர்ணயம் செய்யப்படுகிறது என்று அறிவிக்கலாமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த பிளாக்குகளைப் பொறுத்தவரையில், மான்யம் வழங்குவதற்காக அவைகள் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அதிலே ரொம்பவும் பிற்போக்காக இருக்கிற பகுதிகளுக்கு அதிகமாக மான்யம் வழங்கப்பட்டிருக்கிறது. கொஞ்சம் முற்போக்காக இருக்கக்கூடிய பகுதிக்கு குறைந்த மான்யம் வழங்கப்படுகிறது. மத்தியதரமாக இருக்கக்கூடிய பகுதிக்கும் அதற்குத்தகுந்தவாறு மான்யம் வழங்கப்படுகிறது. நில வரி எந்த அளவுக்கு வருகிறது என்பதை அடிப்படையாகக்கொண்டு அந்த அளவிலே இந்த மான்யம் நிர்ணயிக்கப்படுகிறது.

SRI S. M. ANNAMALAI : கனம் அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலே ஒரு சில பகுதிகளை பிற்பட்ட பகுதி என்று கருதி அவைகளுக்கு சில சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன என்று சொன்னார்கள். அதைப்போலவே வட ஆற்காடு மாவட்டத்திலே சென்ற அக்டோபர் மாதத்திலே இண்டஸ்டிரியல் எகனமிக் சர்வே பரிசீலனை செய்து சர்க்காருக்கு ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்களே, அதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒவ்வொரு ஜில்லாவிலும் சில பிற்போக்கான பகுதிகள் இருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. ரொம்பவும் பிற்போக்கான பகுதிகள்

இருக்கின்றன என்பதற்காக அந்தப் பகுதிகளை உதாரணத்திற்காக எடுத்துச் சொன்னேன். அப்படிப்பார்த்தால் இன்றைக்கு ரொம்பவும் முற்போக்காக இருக்கிறது என்று சொல்லக்கூடிய கோயம்புத்தூர் ஜில்லாவிலேயே தாராபுரமும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் வரட்சியான பஞ்சப் பிரதேசங்கள் என்பது கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும்.

SRI S. NAGARAJA MONIGAR : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டல் வாழக்கூடிய மாவட்டங்களிலே தொழில் வளர்ச்சிக்கான நல்ல திட்டத்தை தயாரிக்கும்பொழுது ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள பிற்போக்கான பகுதிகளை மனதில் வைத்துக்கொண்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். வடக்கு வளருகிறது என்று சொல்லக்கூடிய நிலையிலே, சேலம் ஜில்லாவிலுள்ள ஹோசூர், ஹரூர் முதலிய மிகவும் பிற்போக்கான பகுதிகளை சர்க்கார் கவனத்தில் கொண்டு திட்டத்தை தயாரித்து இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள்ளேயே பிற்போக்காக இருக்கக்கூடிய எல்லாப் பகுதிகளுக்கும் சலுகைகள் கொடுத்துவிட முடியாது. வடக்கு வளருகிறது என்பதை உத்தேசித்தும் ஓரளவுக்கு திருப்தி அடையலாம் என்று கனம் அங்கத்தினருக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் (சிரிப்பு.)

SRI R. CHIDAMBARA BHARATHI : கனம் அமைச்சரவர்கள் கூறியபடி, மிகவும் பிற்போக்கான கிழக்கு ராமநாதபுரம் பகுதியிலே கரும்பு அதிகமாக உற்பத்தி ஆகிறது. ஆகவே அங்கு ஒரு சர்க்கரை ஆலை நிறுவவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரையிலும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. கூடியசீக்கிரம் இதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் பகுதி மிகவும் பிற்போக்கான பகுதி என்றால், கரும்பு சாகுபடி செய்வதற்கு நீர்ப்பாசன வசதி இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஆலை நிறுவுவது தனிப்பட்ட முறையில் கவனிக்க வேண்டிய விஷயம்.

SRI K. VINAYAKAM : Sir, while taking a general survey of our entire State we generally admit that there is regional disparity even within the State itself. Are the Government aware of the fact that the newly added area like Tiruttani taluk was not at all benefited by two Five-Year Plans because it remained in the other State? Will the Government take steps to improve this area during the Third Five-Year Plan at least?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am surprised to see that the hon. Member, Sri K. Vinayakam is still taking interest in Tiruttani area. Special schemes for the development of roads

and rural electrification have been sanctioned and I am sure that during the Third Five-Year Plan period, Tiruttani will get all the benefit of the economic development.

SRI A. GOVINDASAMY : மிகவும் பின்தங்கிய மக்கள் வாழக்கூடிய மாவட்டங்களிலே தொழில்வளர்ச்சிக்கான நல்ல பல திட்டங்களைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்போன்று மிகவும் பிற்போக்காக இருக்கக்கூடிய பகுதிகளிலே தொழில்கள் ஆரம்பிக்கும்பொழுது நான் முன்பு குறிப்பிட்டபடி தூண்டுதல்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. சில வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

SRI T. M. NALLASWAMI : கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்பொழுது பிளாக்குகளை மான்யம் வழங்குவதற்காக மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப் பார்க்கும்பொழுது, ஒரு பிளாக்கிலே ஒரு பகுதி நஞ்சை பிரதேசமாக இருந்து மற்றொரு பகுதி புஞ்சையாக இருக்குமேயானால் அங்கு வருமானம் அதிகமாக இருக்கிறது. அதனாலே அதற்கு குறைந்த மான்யம் வழங்கப்படுகிறது. இதை தவிர்ப்பதற்கு கிராம வாரியாக முற்பட்ட பகுதி, பிற்பட்ட பகுதி என்று பிரித்தால் நடைமுறையில் சாத்தியமாக இருக்கும். இதைக் கருத்திலே வைத்துக்கொண்டு கிராமங்களை இந்த அடிப்படையிலே பிரிப்பார்களா, கனம் அமைச்சர் அவர்களின் அபிப்பிராயம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் சொல்லுவது நடைமுறையில் சாத்யமாக இருக்காது. ஒவ்வொரு கிராமத்தையும் பிரித்து மான்யம் கொடுப்பதல்ல திட்டம். பஞ்சாயத்து சட்ட அடிப்படையிலே பஞ்சாயத்து யூனியன்களுக்கு மான்யம் வழங்கப்படுகிறது. அது வருமானத்தை அனுசரித்து வழங்கப்படுகிறது. பஞ்சாயத்து யூனியனிலே இருக்கக் கூடியவர்கள் பிற்பட்ட பகுதிகளுக்கு அதிகச் சலுகைகளைக் கொடுத்து முக்கியமான தொழில்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதுதான் இந்த திட்டத்தின் அடிப்படை.

Irrigation Schemes (Tiruchirappalli district)

* 2130 *Q.*—SRI P. S. K. LAKSHMIPATHI RAJ (on behalf of SRI S. LAZAR) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the irrigation schemes for Tiruchirappalli district recommended to be included in the Third Five-Year Plan; and

(*b*) the respective date of commencement of each scheme?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The schemes to be included in the Third Five-Year Plan have not yet been finalized.

(*b*) Does not arise.